செ.வெ.எண் : 1052                                                    நாள் : 30/11/10

திருநெல்வேலி

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

## மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம், ஆயிரம் விளக்கு, சென்னை–6.

## அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் – 2010
## 3.12.2010
## கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாநில விருதுகள் வழங்கும் விழா

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3–ஆம் நாளை **"அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக"** தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு வருகிற **3.12.2010** அன்று அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் கொண்டாடப்பட உள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கென கலை மற்றும் விளையாட்டுக்களில் உள்ள திறமைகளை வெளிக்கொணரவே இவ்விழா நடத்தப்படுகிறது. இத்தினத்தில் பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களின் கீழ், உதவி, உபகரணங்கள் மற்றும் மறுவாழ்வு உதவிகளும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்காக சேவை புரிந்த சிறந்த தொழிலதிபர்கள், சிறந்த சமூகப் பணியாளர்கள், சிறந்த ஆசிரியர்கள், சிறந்த நிறுவனம், மற்றும் மாற்றுத் திறனாளிகளில் சிறந்த பணியாளர்கள் ஆகியோருக்கு மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்விழா தொடர்பாக **3.12.2010** அன்று காலை **10.00** மணிக்கு சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் மாற்றுத் திறன் படைத்த மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கலைத் திறமைகள் வெளிக்கொணரப்படும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. இதில் அரசு மற்றும் தனியார் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறன் படைத்த **1200** குழந்தைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

3.12.2010 அன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் தொடர்பான அரசு விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்களுக்கும், சிறந்த நிறுவனங்களுக்கும் மாநில விருதுகளையும், கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழற்கோப்பைகளையும், மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்கி விழாப்பேருரையாற்றவுள்ளார்கள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் அவர்கள் விழாவில் தலைமையுரையாற்றவும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி சிறப்புரையாற்றவும் உள்ளார்கள்.

2/2

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

P.R.NO:1052 Date: 30/11/10

# DEPARTMENT FOR THE WELFARE OF THE DIFFERENTLY ABLED

## COMMISSIONERATE FOR THE WELFARE OF DIFFERENTLY ABLED, THOUSAND LIGHTS, CHENNAI-600 006.

## INTERNATIONAL DAY OF THE DIFFERENTLY ABLED – 2010

## 3-12-2010

## CULTURAL PROGRAMME AND STATE AWARDS DISTRIBUTION FUNCTION

In accordance with 'United Nations Organisations' appeal to observe 3rd December of every year as **"INTERNATIONAL DAY OF THE DIFFERENTLY ABLED".** Our State of Tamil Nadu observes 3-12-2010 as International Day of the Differently Abled. The main aim of this day is to encourage the Differently Abled persons in exhibiting their different skills and abilities in the field of Arts and Sports to the society. On this day, Aids and Appliances and other rehabilitation assistance under various rehabilitation Schemes will be distributed to the Differently Abled persons. State Awards will also be distributed to the Best Employers, Best Social Workers, Best Employees, Best Teachers and Best Institutions.

Cultural Programmes will be performed to showcase the talents of differently abled children at Valluvar Kottam on 3.12.2010 at 10.00 A.M.. About 1200 Differently Abled children from Government and Non-Governmental Organisations throughout the State will participate in the Cultural Programmes.

..2..

At 5-00 p.m. on the same day (i.e. 3.12.2010) a Public function will be held at Valluvar Kottam. Hon'ble Deputy Chief Minister of Tamil Nadu Thiru. M.K. Stalin will be the Chief Guest and distributes State Awards to those who have rendered outstanding services for the Differently Abled persons, Aids and Appliances and Prizes to the winners in the Cultural events for the Differently Abled children. Hon'ble Minister for Social Welfare Tmt.Geetha Jeevan will deliver a Special Address and Worshipful Mayor of Chennai Corporation, Thiru. M. Subramanian will deliver Special Address.

2/2

State Commissioner for the Differently Abled.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9